தரவிட்டிருந்தார்.

மக்கள் நலப் பணியாளர்கள் நீக்கத்துக்கு சென்னை உயர் நீதிமன்றம் தடை விதித்திருந்தபோதும்

இதற்கிடையே, மக்கள் நலப் பணியாள
அமர்த்த
அதிமுக
உயர் நீதி

என்று மக்கள் நலப் பணி
ன்று கேவியட்
செய்ய திட்
ார்.

கருத்தை கேட்டிருக்க வேண்டும். ஆனால் கேட்கவில்லை. எனவே, ஆணைய தலைவர் மற்றும் உறுப்பினர்கள் நியமனத்தை ரத்து




சர்வதேச அளவில் சமூக மேம்பாட்டுக்கு பாடுபடும் ப்ரீமேஷனரி அமைப்பின் இந்திய கிளையின் பொன்விழா நிகழ்ச்சி டெல்லியில் நேற்று நடைபெற்றது. நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட முன்னாள் ஜனாதிபதி அப்துல் கலாமுக்கு, அமைப்பின் கிராண்ட் மாஸ்டர் டாக்டர் பல்ராம் பிஸ்வகுமார், பிராந்திய கிராண்ட் மாஸ்டர் (வட இந்தியா) கே.கே.கவுதம் உள்ளிட்டோர் நினைவு பரிசு வழங்கினர்.

# நேர்மை இருந்தால் அமைதி நிலைத்திருக்கும்




'ஃப்ரீமேஸன்ஸ்' அமைப்பின் பொன்விழா ஆண்டு தில்லியில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. நிகழ்ச்சியில் அந்த அமைப்பின் உறுப்பினர்களுக்கு நினைவுப்பரிசு வழங்குகிறார் குடியரசு முன்னாள் தலைவர் அப்துல் கலாம். நிகழ்ச்சியில் பங்கேற்றவர்கள் (வலது).

## அப்துல் கலாம் பேச்சு

**புது தில்லி, நவ. 25:** நேர்மை எங்கே இருக்கிறதோ, அங்கே அமைதி நிலைத்திருக்கும் என்று குடியரசு முன்னாள் தலைவர் ஏ.பி.ஜே. அப்துல் கலாம் குறிப்பிட்டார்.

'ஃப்ரீ மேஸன்ஸ்' என்ற அமைப்பின் பொன்விழா நிகழ்ச்சி தில்லியில் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. அதில், பொன்விழா ஆண்டு மலரை வெளியிட்டு அவர் ஆற்றிய சிறப்புரை:

நேர்மை என்பது மிகச் சிறந்த பண்புகளில் ஒன்று. எங்கு நேர்மை உள்ளதோ, அங்கு நல்ல குணம் இருக்கும். எங்கு நல்ல குணம் உள்ளதோ, அங்கு நேசமிக்க இணக்கம் இருக்கும். எங்கு நேசமிக்க இணக்கம் உள்ளதோ, அங்கு ஒழுங்கு இருக்கும், எங்கு ஒழுங்கு உள்ளதோ, அங்கு அமைதி நிலவும். அமைதிக்கெல்லாம் அடித்தளமான நேர்மையை, தாய், தந்தை, ஆரம்பப் பள்ளி ஆசிரியர் ஆகிய மூன்று பேர் மட்டுமே நமக்குத் தர முடியும்.

எனது ஆரம்பப் பள்ளி ஆசிரியர் சிவசுப்ரமணிய அய்யரிடம் அறிவின் ஒளியையும், பண்பில் அழகையும் காணமுடிந்தது.

'ஃப்ரீ மேஸன்ஸ்' அமைப்பு கிராமப்புறங்களின் வளர்ச்சிக்காக சுகாதாரம் உள்ளிட்ட முக்கியப் பணிகளை மேற்கொண்டு வருவது பாராட்டுக்குரியது. நாடு முழுக்க 378 கிளைகளையும், 20 ஆயிரம் உறுப்பினர்களையும் கொண்ட இந்த அமைப்பின் சமூகப் பணி போற்றுதலுக்குரியது. மேற்கு வங்கத்தில் ஜோதிர்மயா திட்டம், தமிழ்நாட்டில் சுனாமியால் பாதிக்கப்பட்ட கன்னியாகுமாரி மாவட்டம், பள்ளம் என்ற பகுதியில் வீடுகளைக் கட்டித் தந்தது, பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட குஜராத் மக்களுக்கு வீடுகள் அமைத்து தந்தது ஆகியவற்றைக் குறிப்பிடலாம்.

இது போன்ற அமைப்புகள் செயல்படுத்தி வரும் திட்டங்களைப் போல், கிராமப்புறங்களும் நிலையான வளர்ச்சி பெறும் திட்டங்களை உருவாக்க வேண்டும்.

மருத்துவமனையில் சிகிச்சை பெறும் திக்கற்றோரையும், கைவிடப்பட்டவர்களையும் சந்தித்து நலம் விசாரியுங்கள், அவர்களிடம் உங்கள் அன்பைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.

உங்களது தாய்க்கு சந்தோஷத்தைக் கொடுப்பதன் மூலம், குடும்பத்துக்கு மகிழ்ச்சி கிடைக்கும். உங்கள் குடும்பம் மகிழ்ச்சியாக இருந்தால், சமூகம் மகிழ்ச்சியாக இருக்கும். இந்த சமூகம் மகிழ்ச்சியாக இருந்தால், நாடே மகிழ்ச்சியுறும் என்றார் கலாம்.

இந் நிகழ்ச்சியில், சிறப்பாக் சேவை புரிந்த ஃப்ரீ மேஸன்ஸ் சகோதரர்களுக்கு நினைவுப் பரிசுகள் வழங்கப்பட்டன.

ரீஜனல் கிராண்ட் மாஸ்டர் சகோதரர் கே.கே. கௌதம் வரவேற்புரை வழங்கினார். கிராண்ட் மாஸ்டர் சகோதரர் டாக்டர் (கேப்டன்) பல்ராம் விஸ்வகுமார் சிறப்புரை ஆற்றினார்.

தினகரன்
திருச்சி 28 நவம்பர் 2011

# மாநில விரைவு செஸ்: சென்னை மாணவி முதலிடம்

திருத்துறைப்பூண்டி, நவ. 28: மாநில விரைவு செஸ் சாம்பியன்ஷிப் போட்டியில், 14 வயது சிறுமியர் பிரிவில் சென்னை மாணவி மானசா முதலிடம் பிடித்தார்.

திருவாரூர் மாவட்ட சதுரங்க கழகம் மற்றும் திருத்துறைப்பூண்டி செஸ் கிளப், அரிமா சங்கம் சார்பில் 15வது தமிழ்நாடு 12வயது மற்றும் 14 வயது சிறுவர்களுக்கான மாநில விரைவு செஸ் சாம்பியன்ஷிப் போட்டி திருத்துறைப்பூண்டி சாய்ராம் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் 2 நாட்கள் நடைபெற்றது.



மாநில விரைவு செஸ் சாம்பியன்ஷிப் போட்டி திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி சாய்ராம் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் நேற்று நடந்தது. இதில், முதலிடம் பெற்ற சென்னை மாணவி மானசாவுக்கு டிஎஸ்பி குருசாமி சான்றிதழ் வழங்கினார்.

இதில், மாநிலம் முழுவதும் 23 மாவட்டங்களிலிருந்து 132 பேர் கலந்து கொண்டனர். 12 வயது சிறுவர் பிரிவில் நெய்வேலி கிருத்திகேஷ் முதலிடமும்; கோவை ஈஸ்வர் 2வது இடமும், கன்னியாகுமரி சத்யகிரி 3வது இடமும், திருவள்ளுவர் ஹரிகிருஷ்ணா 4வது இடமும் பிடித்தனர்.

12 வயது சிறுமியர் பிரிவில் நெய்வேலி மீரா முதலிடமும், காஞ்சிபும் வர்ஷா 2வது இடத்தையும், சென்னை கிருத்திகா 3வது இடத்தையும், திருவாரூர் ஹர்சினி 4வது இடத்தையும் பிடித்தனர்.

14 வயது சிறுவர் பிரிவில் திருவள்ளூர் பரத் முதலிடம், முத்தையா 2வது இடம், சென்னை சூரியசந்தர் 3வது இடம், மதுரை அகில் 4வது இடத்தையும் பெற்றனர்.

14 வயது சிறுமியர் பிரிவில் சென்னை மானசா முதலிடம், சேலம் சந்து 2வது இடம், காஞ்சிபுரம் ஆஷா 3வது இடம், நெய்வேலி கமலினி 4வது இடத்தையும் பிடித்தனர்.

மதுரை அதுலன், தஞ்சை அம்புரோஸ், சேலம் பழனியப்பன், திருச்சி ஜராவதம், விளக்குடி கிருஷ்ணசாமி, பட்டுக்கோட்டை மாறன் ஆகியோர் நடுவராக இருந்தனர்.

மாலையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவிற்கு திருவாரூர் மாவட்ட சதுரங்க கழக தலைவர் என். சாந்தகுமார் தலைமை வகித்தார்.

திருத்துறைப்பூண்டி அரிமா சங்கத்தலைவர் பொறியாளர் செல்வகணபதி, சாய்ராம் பள்ளி நிர்வாகி சோமசுந்தரம், தமிழ்நாடு சதுரங்க கழக இணைசெயலாளர் பாலகுணசேரகன், திருவாரூர் மாவட்ட சதுரங்க கழகத்துணை தலைவர் ராஜகோபாலன் முன்னிலை வகித்தனர்.

போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு திருத்துறைப்பூண்டி குருசாமி சான்றிதழ் நினைவு பரிசு வழங்கி பேசினார்.

வட்டார தலைவர் ராஜேஷ்குமார், முன்னாள் தலைவர்கள் உத்தமசோழன், அசோக்குமார், சந்திரசேகரன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தினத் தந்தி

28-11-2011 ★

திருவாரூர்



திருத்துறைப்பூண்டியில்

# மாநில சதுரங்கப்போட்டி

திருத்துறைப்பூண்டி, நவ.28-

திருத்துறைப்பூண்டியில் உள்ள சாய்ராம் மெட்ரிக்குலேசன் பள்ளியில், மாவட்ட சதுரங்க கழகம், திருத்துறைப்பூண்டி சதுரங்கக்கழகம் மற்றும் திருத்துறைப்பூண்டி லயன்ஸ் சங்கம் சார்பில் மாநில அளவிலான சதுரங்கப்போட்டி நடைபெற்றது. போட்டி தொடக்க விழாவிற்கு லயன்ஸ் சங்கத்தலைவர் ஆர்.எஸ். ஆர்.செல்வகணபதி தலைமை தாங்கினார். இதில் தமிழ்நாடு மாநில சதுரங்க கழக இணைச்செயலாளர் ஆர்.கே. பாலகுணசேகரன் வரவேற்று பேசினார். நிகழ்ச்சிக்கு சாய்ராம் பள்ளி முதல்வர் லெட்சுமி முன்னிலை வகித்தார். போட்டியை லயன்ஸ் சங்க வட்டாரத்தலைவர் எம்.ராஜேஸ்குமார் தொடங்கி வைத்தார். இதில் 32 மாவட்டங்களைச் சேர்ந்த 150-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர். விழாவில், திருத்துறைப் பூண்டி சதுரங்கழகத்தலைவர் ஜே.பாஸ்கர், சாய்ராம் பள்ளி நிர்வாகி எம்.சோமசுந்தரம், லயன்ஸ் சங்க முன்னாள் தலைவர்கள் சுரேஷ்குமார், அசோக்குமார், முகம்மது யாசின், கட்டிட பொறியாளர் சங்கத்தலைவர் கைலாசநாதன், லயன்ஸ் சங்க முன்னாள் தலைவர் ஏ. ஆர்.வி.ரவி, ஜோசப்ராஜ், பால்ராஜ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# மாலை முரசு

சென்னை- 26-11-2011



அகில இந்திய பயோ மெடிக்கல் சயன்டிஸ்ட் சங்கம் சார்பில் பஞ்சாப் மாநில தலைநகரான சண்டிகாரில் 32-வது ஆண்டு விழா நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் மூலிகை மருத்துவத்தில் சிறப்பாக பணியாற்றியதற்காக சென்னை மேற்கு தாம்பரம் சாய்ராம் சித்த, ஆயுர்வேத ஓமியோபதி மருத்துவ கல்லூரிகளின் பேராசிரியர் டாக்டர் விக்டர் ராஜமாணிக்கத்திற்கு (இடது)டாக்டர் பிரம்மையா சாஸ்திரி நினைவு விருதினை ராணுவ பாதுகாப்பு ஆராய்ச்சி இயக்குநர் டாக்டர் ஏ.கே.சிங் வழங்கிய போது எடுத்த படம்.

தினத்தந்தி

8 சென்னை 25-11-2011

# பேராசிரியருக்கு விருது



அகில இந்திய பயோ மெடிக்கல் சயன்டிஸ்ட் சங்கம் சார்பில், பஞ்சாப் மாநில தலைநகரான சண்டிகாரில் 32-வது ஆண்டு விழா நடைபெற்றது. இதில் மூலிகை மருத்துவத்தில் சிறப்பாக பணியாற்றியதற்காக, சென்னை மேற்கு தாம்பரம் சாய்ராம் சித்த, ஆயுர்வேத, ஓமியோபதி மருத்துவ கல்லூரிகளின் பேராசிரியர் டாக்டர் விக்டர் ராஜமாணிக்கத்துக்கு, ''டாக்டர் பிரம்மையா சாஸ்திரி'' என்ற நினைவு விருதினை, ராணுவ பாதுகாப்பு ஆராய்ச்சி இயக்குனர் ஏ.கே.சிங் வழங்கினார்.

மக்கள் குரல்

26-11-2011



அகில இந்திய பயோ மெடிக்கல் சயின்டிஸ்ட் சங்கம் சார்பில் பஞ்சாப் மாநிலத்தில் மூலகை மருத்துவத்தில் சிறப்பாக பணியாற்றியதற்காக சென்னை மேற்கு தாம்பரம் ஸ்ரீசாய்ராம் சித்த, ஆயுர்வேத, ஓமியோபதி மருத்துவ கல்லூரிகளின் பேராசிரியர் விக்டர் ராஜமாணிக்கத்திற்கு 'டாக்டர் பிரம்மையா சாஸ்திரி' நினைவு விருதை ராணுவ பாதுகாப்பு ஆராய்ச்சி இயக்குனர் டாக்டர் ஏ.கே.சிங் வழங்கினார்.